செய்திப் பணிப்பாளர் / செய்தி ஆசிரியர் 2016 ஜனவரி 21

**பத்திரிகை அறிவித்தல்**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடி 2013=100) டிசம்பர் 2015**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் புதிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2015 ஒக்டோபர் மாதம் தொடக்கம் உரிய கலண்டர் மாதம் நிறைவடைந்து 21 நாட்களின் பின்னர் வெளியிடப்படுகின்றது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2015 டிசம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 113.2 என வெளியிட்டுள்ளது. டிசம்பர் மாதத்தின் சுட்டெண்ணை நவம்பர் மாதச் சுட்டெண்ணுடன் (112.0) ஒப்பிடுமிடத்து 1.2 சுட்டெண் அதிகரிப்பு மற்றும் 1.1 என்ற வீதாசார அதிகரிப்பு பதிவாகியுள்ளது. இதற்காக உணவுத் தொகுதியின் பெறுமதியில் 0.9% மற்றும் உணவல்லாத் தொகுதியின் பெறுமதியில் 0.1% அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது.

2015 நவம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யுமிடத்து டிசம்பர் மாதத்திற்கான உணவுத் தொகுதியின் பெறுமதி அதிகரிப்பு மாற்றத்திற்காக காய்கறிகள், பச்சை மிளகாய், அரிசி, புதிய மீன், யோகட், முட்டை, தேங்காய், வெள்ளைப்பூடு மற்றும் சின்ன வெங்காயம் ஆகிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் பெரிய வெங்காயம், எலுமிச்சை, உருளைக் கிழங்கு, நெத்தலிக் கருவாடு, கோழி இறைச்சி, மைசூர் பருப்பு, மாம்பழம், வாழைப்பழம் மற்றும் பால்மா ஆகிய உணவுப் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2015 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுமிடத்து டிசம்பர் மாதத்திற்காக உணவு தவிர்ந்த பொருட் தொகுதியின் பெறுமதி மாற்றத்தில் 0.1% அதிகரிப்பைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த உணவு தவிர்ந்த தொகுதியின் பெறுமதி மாற்ற அதிகரிப்புக்காக ‘மதுக் குடிவகைகள்’ மற்றும் ‘போக்குவரத்து’ ஆகிய தொகுதிகளுக்குரிய பொருட்களின் விலை அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது. ‘போக்குவரத்து’ தொகுதியின் பெறுமதி அதிகரிப்பில் விமானப் போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகரிப்பு முழுமையாகத் தாக்கம் செலுத்தியுள்ளது. ‘வீடு, நீர், மின்சாரம், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்’ ஆகிய தொகுதிகளில் வீழ்ச்சியைக் காட்டுவது L.P வாயு மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை வீழ்ச்சியாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அறிவித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர சதரசிங்க அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் டிசம்பர் மாதத்திற்கான வருடாந்த பணவீக்கம் 4.2% வீதம் எனக் கணக்கிடப் பட்டுள்ளதாகவும் கடந்த நவம்பர் மாதத்திற்கான அந்தப் பெறுமதி 4.8% ஆகப் பதிவாகியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

தொகைமதிப்பு மற்றம் புள்ளிவிபரத் திணைக்ள்ளம்
தொலைபேசிஇலக்கம் : 011- 2147001 / 011 - 2147020